www.Padasalai.Net. www.Trb Tnpsc.Com

Tsi9T

தென்காசி மாவட்டம்

முழு ஆண்டுத் தேர்வு - 2024

12-04-2024

வகுப்பு 9

கால அளவு: 3.00 மணிநேரம் தமிழ் மதிப்பெண்கள்: 100

பகுதி -I

**உரிய விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக. 15×1=15**

1) தமிழ்விடு தூது ............. என்னும் இலக்கிய வகையைச் சார்ந்தது.
அ) தொடர்நிலைச் செய்யுள் ஆ) புதுக்கவிதை
இ) சிற்றிலக்கியம் ஈ) தனிப்பாடல்

2) நீர்நிலைகளோடு தொடர்பில்லாதது எது?
அ) அகழி ஆ) ஆறு இ) இலஞ்சி ஈ) புலரி

3) விடை வரிசையைத் தேர்க.
அ) இது செயற்கைக் கோள் ஏவு ஊர்தியின் செயல்பாட்டை முன்கூட்டியே கணிக்கும்
ஆ) இது கடல் பயணத்துக்காக உருவாக்கப்பட்ட செயலி
அ) நேவிக், சித்தாரா ஆ) நேவிக், வானூர்தி
இ) வானூர்தி, சித்தாரா ஈ) சித்தாரா, நேவிக்

4) பூவாது காய்க்கும், மலர்க்கை - அடிக்கோடிட்ட சொற்களுக்குரிய இலக்கணம் யாது?
அ) பெயரெச்சம், உவமைத் தொகை
ஆ) எதிர்மறைப் பெயரெச்சம், உருவகம்
இ) வினையெச்சம், உவமை
ஈ) எதிர்மறை வினையெச்சம், உவமைத் தொகை

5) ‘பொதுவர்கள் பொலி உறப் போர் அடித்திடும்’ நிலப்பகுதி ...........
அ) குறிஞ்சி ஆ) முல்லை இ) நெய்தல் ஈ) பாலை

6) இளங்கமுகு, செய்கோலம் - இலக்கணம் குறிப்பு
அ) உருவகத் தொடர், வினைத்தொகை
ஆ) பண்புத் தொகை, வினைத் தொகை
இ) வினைத் தொகை, பண்புத் தொகை
ஈ) பண்புத் தொகை, உருவகத் தொடர்

7) இந்திய தேசிய இராணுவத்தை .......... இன் தலைமையில் ............. உருவாக்கினார்.
அ) சுபாஷ் சந்திரபோஷ், இந்தியர் ஆ) சுபாஷ் சந்திரபோஷ், ஜப்பானியர்
இ) மோகன்சிங், ஜப்பானியர் ஈ) மோகன்சிங், இந்தியர்

8) விடைக்கேற்ற வினாவைத் தேர்வு செய்க.
விடை - பானையின் வெற்றிடமே நமக்குப் பயன்படுகிறது.
அ) பானையின் எப்பகுதி நமக்குப் பயன்படுகிறது
ஆ) பானை எப்படி நமக்குப் பயன்படுகிறது?
இ) பானை எதனால் நமக்குப் பயன்படுகிறது?
ஈ) பானை எங்கு நமக்குப் பயன்படுகிறது?

9) வண்ணதாசனுக்கு சாகித்திய அகாதெமி விருது பெற்றுத் தந்த நூல் எது?
அ) ஒரு சிறு இசை ஆ) முன்பின்
இ) அந்நியமற்ற நதி ஈ) உயரப் பறத்தல்

10) ‘ஞானம்’ என்பதன் பொருள் யாது?
அ) தானம் ஆ) தெளிவு இ) சினம் ஈ) அறிவு

11) பின்வருவனவற்றுள் ஏறுதழுவுதல் குறித்த செய்தி இடம் பெறாத நூல் எது?
அ) சிலப்பதிகாரம் ஆ) கலித்தொகை
இ) புறப்பொருள் வெண்பா மாலை ஈ) மதுரைக் காஞ்சி

Kindly send me your key answers to our email id - padasalai.net@gamil.com

www.Padasalai.Net. www.Trb Tnpsc.Com



பாடலைப் படித்து பின்வரும் வினாக்களுக்கு (12, 13, 14, 15) விடை தருக.

'தோரண வீதியும் தோம்அறு கோட்டியும்
பூரண கும்பமும் பொலம்பா லிகைகளும்
பாவை விளக்கும் பலவுடன் பரப்புமின்
காய்குலைக் கமுகும் வாழையும் வஞ்சியும்

12) இப்பாடல் இடம்பெற்ற நூல் எது?
அ) பெரியபுராணம் ஆ) மணிமேகலை
இ) புறநானூறு ஈ) தமிழ்விடுதூது

13) இப்பாடலின் ஆசிரியர் யார்?
அ) சேக்கிழார் ஆ) சீத்தலைச் சாத்தனார்
இ) குடபுலவியனார் ஈ) கல்யாண்ஜி

14) இப்பாடலில் இடம் பெற்றுள்ள அடி எதுகைகளை எழுதுக.
அ) புரணம் - பொலம்பாலிகை ஆ) தோரண வீதி - தோம்அறு கோட்டி
இ) தோரண வீதி - பூரண கும்பம் ஈ) வாழை - வஞ்சி

15) 'வாழையும் வஞ்சியும்' - இலக்கணக் குறிப்பு
அ) எண்ணும்மை ஆ) உம்மைத் தொகை
இ) பண்புத் தொகை ஈ) வினைத் தொகை.

## பகுதி - II

### பிரிவு - 1

**எவையேனும் நான்கு வினாக்களுக்கு மட்டும் குறுகிய விடையளிக்க. 4×2=8**
**21 ஆவது வினாவிற்கு கட்டாயமாக விடையளிக்கவும்.**

16) **விடைக்கேற்ற வினா அமைக்க**
அ) மனித வாழ்வைச் செழுமைப்படுத்துபவை அறப்பண்புகளே.
ஆ) சோழர்கள் காலம் செப்புத் திருமேனிகளின் பொற்காலம் என அழைக்கப்படுகிறது

17) கூவல் என அழைக்கப்படுவது எது?

18) சாரதா சட்டம் எதற்காக இயற்றப்பட்டது?

19) கண்ணன் புகுந்த பந்தல் எவ்வாறு இருந்தது?

20) பகுத்தறிவு என்றால் என்ன?

21) 'தரும்' - என முடியும் திருக்குறளை எழுது.

### பிரிவு - 2

**எவையேனும் ஐந்து வினாக்களுக்கு மட்டும் குறுகிய விடையளிக்க. 5×2=10**

22) **பிழைநீக்கி எழுதுக.**
அ) மதியழகன் தீக்காயம் ஏற்பட்ட இடத்தில் உடனடியாகத் தண்ணீர் கொண்டு குளிர வைத்தாள்.
ஆ) மழையே பயிர்க்கூட்டமும் உயிர்க்கூட்டமும் வாழப் பெருந்துணை புரிகின்றன.

23) **மரபு இணைச் சொற்களைத் தொடரில் அமைத்து எழுதுக.**
அ) நகமும் சதையும் ஆ) கண்ணும் கருத்தும்

24) **தமிழெண்கள் கொண்டு நிரப்புக.**
அ) தமிழிலுள்ள மொத்த எழுத்துகள் ............
ஆ) சார்பெழுத்துகள் ............. வகைப்படும்

25) **கலைச்சொல் தருக.**
அ) Download ஆ) Personality

26) **இடைச்சொற்களைக் கொண்டு தொடர்களை இணைக்க.**
அ) பெரும் மழை பெய்தது. வெள்ளம் கரைபுரண்டு ஓடியது.
ஆ) பழனிமலை பெரியது. இமயமலை மிகப்பெரியது

Kindly send me your key answers to our email id - padasalai.net@gamil.com

27) **சொற்றொடர் உருவாக்குக.**

அ) பசுமரத்தாணி போல

ஆ) மழைமுகம் காணாப் பயிர் போல

28) **தொடரைப் பழமொழி கொண்டு நிறைவு செய்க.**

அ) சித்திரமும் கைப்பழக்கம் ............

ஆ) கற்றோருக்கு சென்ற ............

## பகுதி - III

### பிரிவு - 1

**எவையேனும் இரண்டு வினாக்களுக்கு மட்டும் சுருக்கமான விடையளிக்க. 2×3=6**

29) பள்ளி மாணவர்களுக்கான தமிழக அரசின் இணையவழிச் சேவைகளை எழுதுக.

30) முழு உருவச் சிற்பங்கள் - புடைப்புச் சிற்பங்கள் இரண்டிற்கும் உள்ள வேறுபாடு யாது?

31) **உரைப் பத்தியைப் படித்து வினாக்களுக்கு விடை தருக.**

மேலைநாடுகளில் குறிப்பாகத் தேசிய விளையாட்டாகக் காளைச் சண்டையைக் கொண்டிருக்கும் ஸ்பெயின் நாட்டில், காளையைக் கொன்று அடக்குபவனே வீரனாகக் கருதப்படுவான். அவ்விளையாட்டில் ஆயுதங்களைப் பயன்படுத்துவதும் உண்டு. மேலை நாடுகளில் ஆண்டு முழுவதும் நடத்தப்படும் காளை விளையாட்டு மனிதனுள் ஒளிந்திருக்கும் வன்மத்தையும் போர் வெறியையும் வெளிப்படுத்துகிறது.

அ) ஸ்பெயின் நாட்டின் தேசிய விளையாட்டு எது?

ஆ) யார் வீரனாகக் கருதப்படுவான்?

இ) வன்மத்தையும் போர் வெறியையும் வெளிப்படுத்துவது எது?

### பிரிவு - 2

**எவையேனும் இரண்டு வினாக்களுக்கு மட்டும் சுருக்கமான விடையளிக்க. 2×3=6**
**(34 வது வினா கட்டாயம்)**

32) பழங்களை விடவும் நசுங்கிப் போனது - இடம் சுட்டிப் பொருள் விளக்கம் தருக.

33) நாம் கடைப்பிடிக்க வேண்டிய வாழ்க்கை நெறிகளாக யசோதர காவியம் குறிப்பிடுவன யாவை?

34) **அடிபிறழாமல் எழுது.**

அ) பூவாது காய்க்கும் - சிறுபஞ்சமூலப் பாடல்

**(அல்லது)**

ஆ) நீர் இன்று அமையா - எனத் தொடங்கும் புறநானூறு பாடல்

### பிரிவு - 3

**எவையேனும் இரண்டு வினாக்களுக்கு மட்டும் சுருக்கமான விடையளிக்க. 2×3=6**

35) உருவக அணியை சான்றுடன் விளக்குக.

36) வல்லினம் இட்டும் நீக்கியும் எழுதுவதன் இன்றியமையாமையைச் சான்றுடன் விளக்குக.

37) **அலகிட்டு வாய்ப்பாடு தருக.**

செல்வத்துள் செல்வம் செவிச்செல்வம் அச்செல்வம்
செல்வத்துள் எல்லாம் தலை.

## பகுதி - IV

**அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்க. 5×5=25**

38) அ) பெரியபுராணம் காட்டும் திருநாட்டுச் சிறப்பினை தொகுத்து எழுதுக.

**(அல்லது)**

ஆ) வாழ்க்கைப் போரில் வெற்றி பெறுவதற்கான வழிகளைக் கமுகுமரம் வாயிலாக ஆசிரியர் எவ்வாறு உணர்த்துகிறார்?

Kindly send me your key answers to our email id - padasalai.net@gamil.com

www.Padasalai.Net. www.Trb Tnpsc.Com




39) அ) உங்கள் பள்ளி நூலகத்திற்குத் தமிழ் - தமிழ் - ஆங்கிலம் என்னும் கையடக்க அகராதி பத்துப்படிகளை பதிவஞ்சலில் அனுப்புமாறு நெய்தல் பதிப்பகத்திற்கு ஒரு கடிதம் எழுதுக.

(அல்லது)

ஆ) எனது பயணம் என்னும் தலைப்பில் உங்கள் பயண அனுபவங்களை எழுதுக.

40) காட்சியை கண்டு கவினுற எழுதுக.



41) அடைப்புக்குள் உள்ள சொற்களைப் பொருத்தமான வினைமுற்றாக மாற்றி, கோடிட்ட இடங்களில் எழுதுக.

1. இந்திய மொழிகளின் மூலமும் வேருமாகத் தமிழ் ........... (திகழ்)
2. வைதேகி நாளை நடைபெறும் கவியரங்கில் .............. (கலந்துகொள்)
3. உலகில் மூவாயிரம் மொழிகள் ................. (பேசு)
4. குழந்தைகள் அனைவரும் சுற்றுலா .............. (செல்)
5. தவறுகளைத் ............. (திருத்து)

42) அ) பொன்மொழிகளைத் தமிழில் பெயர்க்க.

1. Every flower is a soul blossoming in nature
2. Sunset is still my favourite colour, and rainbow is second
3. An early morning walk is a blessing for the whole day.
4. Just living is not enough .......one must have sunshine, freedom, and a little flower.

(அல்லது)

ஆ) சமூகத்திற்கு என் பணிகள்

1. குப்பைகளை குப்பைத் தொட்டியில் போடுவேன்
2. தண்ணீர் வீணாவதை எங்கு கண்டாலும் தடுப்பேன்

## பகுதி - V

அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்க. **3×8=24**

43) அ) அன்றாட வாழ்வில் நீங்கள் பயன்படுத்தும் இரண்டு இணையவழிச் சேவைகள் பற்றி விரிவாகத் தொகுத்து எழுது.

(அல்லது)

ஆ) ஏமாங்கத நாட்டு வளம் குறித்த வருணனைகளை நும் ஊரின் வளங்களோடு ஒப்பிடுக.

44) அ) 'தாய்மைக்கு வறட்சி இல்லை' என்னும் சிறுகதையில் வரும் ஏழைத்தாயின் பாத்திரப் படைப்பை விளக்குக.

(அல்லது)

ஆ) 'தண்ணீர்' கதையை கருப்பொருள் குன்றாமல் தருக.

45) அ) நீங்கள் விரும்பிப் படித்த நூல் ஒன்றுக்கு மதிப்புரை தருக.

(அல்லது)

ஆ) பள்ளியில் நடைபெற்ற இலக்கியமன்ற விழா நிகழ்ச்சி செய்திகளை திரட்டித் தொகுப்புரை உருவாக்குக.

------

Kindly send me your key answers to our email id - padasalai.net@gamil.com